இந்தச் சாலைகள் சம்பந்தமாக ஏற்கனவே சொல்லியபடி குறுகிய காலத்திலாவது இந்த சாலைகளைச் செப்பனிடுவதை உடனடியாக செய்து தரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே சாலைகளை பராமரிப்பதற்காக 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதியை வைத்து சாலைகள் பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

முற்பகல் 10-30

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் சாலைகள் பழுதுபடுகின்ற போது அதைச் சீரமைப்பதற்காக நகராட்சியால் ஒரு தொகை நிர்ணயிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் அந்தத் தொகை போதாது என்ற காரணத்தால் அந்த வேலைகளை எடுத்துச் செய்வதில் சிரமப்படுகிறார்கள். செய்வதில்லை. அதைப் போக்க மாநகராட்சி, நகராட்சிகள் அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ஒதுக்கப்படுகின்ற அந்தத் தொகையினை அரசு அதிகரிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகள் அதன் அதன் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் என்னிடத்திலே வந்து என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32, திரு. ம. தனபால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

32—

திருப்போரூரிலிருந்து குடிநீர்த் திட்டத்தை காலவாக்கம் பகுதிக்கு விரிவுபடுத்தல்.

*10432—திரு. ம. தனபால் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் பேரூராட்சியில் காலவாக்கம் பகுதிக்கு திருப்போரூரிலிருந்து குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் விரிவுபடுத்தப்படுமா?

1993 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) குடிநீர் விரிவு திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தொகை முழுவதும் திருப்போரூர் பேரூராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நடப்பாண்டில் செலுத்தும்பட்சத்தில் திட்டம் மேற்படி வாரியத்தினால் மேற்கொள்ளப்படும்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தை தமிழகத்திற்கு ஈந்த எங்கள் தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 'ஆம்' என்ற பதில் அமைச்சர் அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் அதை உடனடியாக இந்த வருடத்தில் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் குடிநீர்த் திட்டம் ரூபாய் 41 லட்சம் மதிப்பீட்டில் செயற்படுத்தப்பட்டு பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் குடிநீர் ஆதாரமாக 4 நீர் உறிஞ்சும் கிணறுகள் சிறுதாவூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 15 குதிரைத் திறன் கொண்ட மின் இறைப்பான் மூலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. திருப்போரூர் பேரூராட்சியிலுள்ள காலவாக்கம் பகுதியிலுள்ள மக்கள் தொகை 1450. இந்தப் பகுதியில் 7 திறந்தவெளிக் கிணறுகள், 6 கையிறைப்பான்கள் உள்ளன. திருப்போரூர் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்திச் செய்து திருப்போரூர் பேரூராட்சியில் காலவாக்கம் பகுதிக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்குரிய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டத்தில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு பகிர்மானக் குழாய்கள் பதித்து 10 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகிக்கப்படும். திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திருப்போரூர் பேரூராட்சி அந்தத் தொகையை செலுத்தியவுடன் அந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.